

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் (பொறுப்பு) மு. மேகவர்ணம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.8.2025) சென்னையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகள் கூட்டணியின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்களுக்கான ஆதரவு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, கழக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்ட இந்தியா கூட்டணியின் மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை கொறடா நாசீர் உசேன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கூட்டாட்சிக் கருத்தியலின் காப்பாளராக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!

### கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்க துணிச்சலுடன் போராடுகிறார்!

# எனக்கு வாக்களித்தால் அரசியல் அமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற முழு மூச்சுடன் பாடுபடுவேன்!

## சென்னையில் – எதிர்க்கட்சிகள் கூட்டணி குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் – நீதியரசர் சுதர்சன் ரெட்டி உரை!



**சென்னை, ஆக. 26 -**

**சென்னை - தியாகராயர் நகர், ‘அக்கார்டு’ ஓட்டலில் நேற்று முன்தினம் (24.8.2025) மாலை ‘இந்தியா’ கூட்டணி குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் சுதர்சன் ரெட்டி - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட இந்தியா கூட்டணித் தலைவர்கள் மற்றும் எம்.பி.க்களிடம் தனக்கு ஆதரவு கேட்டுப் பேசுகையில், “கூட்டாட்சிக் கருத்தியலின் காப்பாளராக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார்! கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்க அவர் துணிச்சலுடன் போராடுகிறார்!” என்றும், “எனக்கு வாக்களித்தால் அரசியல் அமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற முழு மூச்சுடன் பாடுபடுவேன்!” என்றும் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்வில் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு வாய்ந்த திராவிடக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப் படுத்திய சிறந்த தலைவர்களுக்கு என் மரியாதையைச் செலுத்துகிறேன்.

இந்த வேளையில், பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர், காமராஜர், எம்.ஜி.ஆர். போன்ற மகத்தான தலைவர்களை இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

மேலும், இந்தக் கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம், இசையை பிரதிநிதித்துவப் படுத்திய திருவள்ளுவர், பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் ராஜாஜி போன்ற தலைவர்களுக்கும், இந்த மாபெரும் நிலமான தமிழ்நாட்டிற்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து பெரிய நாகரிகங்களும் மனிதச் சமுதாயங்களும் ஒரு உண்மையை அறிந்திருந்தன. அதாவது, மனிதன் கற்பனை செய்யும் திறன் கொண்டவன். இந்தியா அந்தக் கற்பனைத் திறனை வளர்த்தது. ஆனால், இந்தியாவில் அந்தக் கற்பனைத் திறனை மிகச்சிறப்பாக வளர்த்த மாநிலம் தமிழ்நாடு. இந்த தொலைநோக்குப் பார்வை இல்லையெனில், இன்று தமிழ்நாடு முன்னேற்ற நிலையை எட்டியிருக்காது.

**முன்னோடி மாநிலம்!**

தமிழ்நாடானது, மனித வள மேம்பாட்டுக் குறியீடு, சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் இந்தியாவை முழுவதையும் முன்னின்று வழிநடத்துகிறது. சமூகத்தின் பின்தங்கியோருக்கான சமூக-பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கியதிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகும். அது என் இதயத்திற்கு மிக நெருக்கமானது.

நான் வழங்கிய தீர்ப்புகள் குறித்து நான் பேசுவதில்லை. அதைப் பற்றி நீங்களும் சமூகமுமே தீர்மானிக்க வேண்டும். நான் அரசியல் சாசனத்தை உண்மையாகவும், விசுவாசமாகவும் தூக்கிப் பிடித்தவன். இப்போது, நீங்கள் எனக்கு ஒரு வாய்ப்புத் தந்தால் அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

நான் உங்கள் முன் நின்று கூறுகிறேன், கூட்டாட்சித் தத்துவத்தையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் கைவிடமாட்டேன். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டாட்சித் தத்துவத்தின் வீரனாகத் திகழ்கிறார். மேலும், அவர் அரசியல் சாசனத்தின் பிரதிநிதியாகவும் செயல்படுகிறார். அவர் இதற்காக தற்போது வரை ஏராளமான சவால்களைச் சந்தித்து, அவற்றை மிகவும் தீரத்துடன் எதிர்த்து வருகிறார்.

**அரசியல் சாசனம் ஆபத்தில்!**

இந்தியாவின் அரசியல் சாசனம் ஆபத்தில் உள்ளது. “ஒரே நாடு” என்று பேசுகிறார்கள். ஆனால், இந்தியா என்பது மாநிலங்களின் கூட்டமைப்பு ஆகும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டாட்சித் தத்துவத்தைக் காப்பாற்றுவதற்காக “ஒரே நாடு” என்று பேசுபவர்களிடம் இருந்து தொடர்ந்து பல சவால்களைச் சந்தித்து வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பின்னர், சுதர்சன் ரெட்டி அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-**

நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளின் சார்பில் துணை குடியரசுத் தலைவர் வேட்பாளராக நான் நிறுத்தப்பட்டுள்ளேன். எந்த அரசியல் கட்சியிலும் நான் சேர்ந்திராததால்தான் எதிர்க்கட்சிகள் என்னைத் துல்லியமாகத் தேர்வு செய்துள்ளன. அந்தந்த அரசியல் கட்சிகளின் ஒவ்வொரு தலைவருக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். நாட்டின் 60 விழுக்காடு வாக்காளர்களின் பிரதிநிதியாக நான் நிறுத்தப்பட்டுள்ளேன்.

இந்தப் பயணம் எனக்கு 1971 முதல் தொடர்கிறது. துணைக் குடியரசுத் தலைவர் பதவி என்பது அரசியல் நிறுவனம் அல்ல. அதனைச் சார்பின்றி செயல்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது. என்னைப் பொருத்தமான வேட்பாளராகக் கருதிய அனைவருக்கும் நம்பிக்கையையும் உறுதியையும் வழங்குகிறேன்.

**பொதுநலத் தலைவர் மு.க.ஸ்டாலின்!**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மிகத் திறமையான நபர். அவரால்தான் இந்நிலைமை சாத்தியமானது. அவர் ஒரு சிறந்த பொதுநலத் தலைவர். அவரை நேரில் சந்திப்பது எனக்கு மகிழ்ச்சியானது.

அமித்ஷாவின் அறிக்கைக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது குறித்து நான் தொடர்ந்து பதிலளிக்க விரும்பவில்லை.

**வாக்குறுதி!**

சி.பி.ராதாகிருஷ்ணனுக்கும் எனக்கும் வித்தியாசமே இல்லை. அவர் தமிழ்நாட்டில் பிறந்தவர், நான் ஆந்திராவில் பிறந்தவன். மற்ற வேட்பாளர் குறித்து எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை. இந்தத் தேர்தல் மிகவும் மரியாதைக்குரிய முறையில் நடைபெறும் என்று நான் நாட்டிற்கு வாக்குறுதி அளித்துள்ளேன்.

நான் ஒரு சுதந்திர அரசியல் ஜனநாயகவாதி. அரசியலமைப்பின் படியே எனது கடமைகளை நிறைவேற்றி வந்துள்ளேன்.

நான் தெலுங்கானாவைச் சேர்ந்தவன். கூட்டணி என்பது வேறுபட்டது. எனவே சந்திரபாபு நாயுடுவுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. எனது வேட்பு மனுவை என் திறமையின் அடிப்படையிலேயே பார்க்கிறேன்.

இவ்வாறு சுதர்சன் ரெட்டி அவர்கள் கூறினார்.

# முதல்வரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை சென்னை மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் இன்று (26.8.2025) தொடங்கி வைக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இத்திட்டத்தின் வாயிலாக 3.05 இலட்சம் மாணவ-மாணவியர்கள் தினசரி பயன்பெற உள்ளார்கள்.

இந்த மகத்தான திட்டம் குறித்து நேற்று முன்தினம் ‘முரசொலி’யில், “கல்வியை வளர்க்கும் காலை உணவுத் திட்டம்” எனும் தலைப்பில் தீட்டியிருந்த “உங்களில் ஒருவன்” கடிதத்தில் இம்மகத் தான திட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்ததாவது:-

**நாளைய தலைமுறையின் இன்றைய வளர்ச்சியில் அக்கறை கொண்டு தாயுள்ளத்துடன் செயல்படும் திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழ் நாட்டில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு, தெலங்கானா போன்ற அண்டை மாநிலங்களிலும் இதனைப் பின்பற்றுவதற்கான செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதும், இங்கிலாந்து - கனடா - இலங்கை உள்ளிட்ட நாடுகளில் காலை உணவுத் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருப்பதும், உலகக் கண்ணோட்டத்துடன் தமிழ்நாடு செயல்படுவதை உறுதி செய்கிறது.**

**உணவை அளித்து உயிரை வளர்க்கும் தமிழர் மரபில், குழந்தைகளுக்குக் காலை உணவு தந்து கல்வியை வளர்க்கும் முதன்மையான பணியை மேற்கொண்டிருக்கும் உங்களில் ஒருவனான என் தலைமையிலான நம்முடைய அரசு அடுத்தகட்டமாக காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யவிருக்கிறது.**

**இந்த விரிவாக்கத்தின் மூலம் நகர்ப்புறம் சார்ந்த 2 ஆயிரத்து 429 பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் 3 இலட்சத்து 6 ஆயிரம் மாணவ - மாணவியர் பயன் பெறுவர்.**

**நாள்தோறும் திட்டங்கள், நலிவுற்றோர் ஏற்றம் காணும் செயல்பாடுகள், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கத்துடன் பயணிக்கும் திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்களில் ஒன்றான காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்யும்போதெல்லாம் பள்ளிக் குழந்தைகளின் வயிறு நிறைகிறது. அவர்களின் அறிவு வளர்கிறது. பெற்றோரின் மனதில் மகிழ்ச்சிப் புன்னகை மலர்கிறது. தமிழ்நாடு, பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.**

இவ்வாறு “உங்களில் ஒருவன்” கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்.

### பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் அடிச்சுவட்டில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘திராவிட மாடல்’ ஆட்சியை நடத்தி வருகிறார்!

## புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேச்சு!



புதுடெல்லி, ஆக. 26-

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் அடிச்சுவட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘திராவிட மாடல்’ ஆட்சியை நடத்தி வருகிறார் என்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் பேசியபோது தமிழ்நாடு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி குறிப்பிட்டார்.

புதுதில்லியில் 24.08.2025, 25.08.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியாவின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகராக விட்டல்பாய் படேல் பொறுப்பேற்றதன் நூற்றாண்டு விழா” நிகழ்ச்சியில் “இந்தியா மக்களாட்சியின் தாயகம்” என்ற தலைப்பில் “தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தின் துணை சபாநாயகர் கே.பிச்சாண்டி எம்.ஏ. ஆற்றிய உரை வருமாறு:-

இந்த இனிய மாலை பொழுதில் இந்த நூற்றாண்டு விழாவில் பங்கேற்கவும், உங்கள் அனைவரையும் சந்திக்கவும் நல்வாய்ப்பு நல்கிய நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, முதலில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“இந்தியாவில் முதல் சபாநாயகராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட விட்டல்பாய் படேல் பொறுப்பேற்றதன் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில்” பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், மேலும் நாட்டின் சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் நிலைநாட்ட அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு தமிழ்நாடு மாநிலத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விட்டல்பாய் படேல் முக்கிய இந்திய அரசியல் மேதையாகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தார் என்பதுடன், அவர் சர்தார் வல்லபாய் படேலின் மூத்த சகோதரரும் ஆவார் என்பதையும் நான் நன்கு அறிவேன். இந்தியாவின் சட்டமன்ற வரலாற்றில் முன்னோடியாகவும், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் செல்வாக்கு மிக்க நபராகவும் இருந்த அவர், நாட்டின் அரசியல் அமைப்பை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றிய தனிச்சிறப்பு மிக்க தலைவராக தனித்து நிற்கிறார். அவரது வாழ்க்கை, ஆங்கிலேய காலனித்துவ ஆட்சிக்கு எதிரான இந்தியாவின் சுதந்திரப் போராட்ட மாகாவியத்துடன் இரண்டறக்கலந்ததாகும்.

இப்போது, நம்முடைய கருத்துகளை ஒன்றாக விவாதிக்க உதவிய “இந்தியா மக்களாட்சியின் தாயகம்” என்ற தலைப்புக்குச் செல்ல விரும்புகிறேன்.

ஆபிரகாம் லிங்கன் ”மக்களால், மக்களுக்காக நடத்தப்படுவதே மக்களாட்சி” என்று தன்னகத்தே துல்லியமாக பொருள்பொதிந்த வரையறையை முன்வைக்கிறார்.

**“எனது அரசு சிறுபான்மையினருக்கானது” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர்!**

மக்களாட்சி என்பது அனைத்து மக்களின் சார்பாக, அவர்களின் “விருப்பத்திற்கு” ஏற்ப செயல்படும் ஓர் அரசு ஆகும். இது அரசியலில் வெறும் எண் விளையாட்டு அல்ல.

சரியாக புரிந்துகொள்ளப் பட்டால், மக்களாட்சி என்பது பெரும்பான்மையினரின் ஆட்சி என்று கூட இருக்கக்கூடாது. ஏனெனில் அது சிறுபான்மையினரின் நலன்களை முற்றிலும் புறக்கணிப்பதாகும்.

எமது கட்சியின் தலைவரான தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் “எனது அரசு சிறுபான்மையினருக்கானது” என்பார்.

மக்களாட்சியில், மக்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானதாகும். வாக்களிப்பது அல்லது பதவிக்குப் போட்டியிட்டு மக்களின் பிரதிநிதியாக மாறுவது போன்றவை மக்களாட்சி முறையில் அரசில் பங்கேற்பதற்கான நன்கறியப்பட்ட வழிகளாகும்.

இந்தியா உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாக பரவலாகக் கருதப்படுகிறது, மக்களாட்சி தாயகமாக அறியப்படுகிறது. இவ்வாறு அழைக்கப்படுவதற்கு முக்கிய காரணம், அதன் அதிக மக்கள் தொகையும், அதன் நிறுவப்பெற்ற மக்களாட்சி அமைப்புமுறையும் ஆகும். மக்களாட்சியின் தாயகமாக திகழும் இந்தியாவிற்கு, தமிழ்நாட்டின் பங்களிப்பு அளவற்றதாக உள்ளது.

**நமது தேர்தல் அமைப்பு முறையின் முன்னோடி!**

10 ஆம் நூற்றாண்டு சோழர்கள் காலத்தில் பின்பற்றப்பட்ட தொன்மையான தேர்தல் முறை ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உத்திரமேரூர் கல்வெட்டுகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளவாறு, கிராம நிருவாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இந்த ஏற்பாட்டுமுறை பயன்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டு முறையில் கிராமங்கள் வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய பனை ஓலைகள் ஒரு பானைக்குள் வைக்கப்பட்டு, சிறுவன் ஒருவன் ஓலைச் சீட்டுகளைத் தெரிவு செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை அறிவிக்கும் தனித்துவமான முறை ஒன்றின் வாயிலாக மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர், இந்த ஏற்பாட்டுமுறை, நமது தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நமது தேர்தல் அமைப்பு முறையின் முன்னோடியாகக் கருதப்படுகிறது.

1921 ஆம் ஆண்டிலேயே, ஆங்கிலேயர்கள் ஆட்சிபுரிந்த இந்தியாவில், பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமையை வழங்கும் தீர்மானத்தை கணிசமான பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய முதல் சட்டமன்றம் மதராஸ் மாகாணம் என்பதை நான் பெருமையுடன் கூறுகிறேன்.

**மக்களாட்சியும் திராவிட அரசும்**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க) நிறுவனர் கா. ந. அண்ணாதுரை அவர்கள் மக்களாட்சியின் தீவிர ஆதரவாளர். மக்களாட்சியை மக்களின் நலன், முன்னேற்றம், சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கான மிகவும் பயனுள்ள அமைப்பாகவும் கருதினார். மக்கள் தேர்தல்கள் வாயிலாக தங்கள் தலைவர்களையும் கொள்கைகளையும் தேர்ந்தெடுக்கும் அவர்தம் சக்தி மற்றும் உரிமையின்பால் அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். தொடக்கத்தில், தனி திராவிட நாடு என்ற கோரிக்கையை கொண்டவராக இருந்த போதிலும், தேர்தல்கள் மற்றும் அரசியல் பங்கேற்பு வாயிலாக மக்களின் நம்பிக்கையை வெல்வது குறித்த முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற இந்திய அரசமைப்பின் இந்திய கட்டமைப்பிற்குள் உள்ள மக்களாட்சி அணுகுமுறையை இறுதியில் அவர்ஏற்றுக் கொண்டார்,

அவரின் கூற்றுப்படி, இந்தியாவில் காணப்படுகின்ற பன்முகத்தன்மையையும் பல இன சமூகத்தையும் கருதிப் பார்க்கும்போது, மக்களாட்சி இந்தியாவிற்கு மிகவும் பொருத்தமான ஆட்சி முறையாகும்.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் ஆட்சியில் பங்கேற்கவும், அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்தவும் இது ஒரு அடித்தளத்தை வழங்கியதாக அவர் நம்பினார்.

அதேபோல், தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள், உண்மையான மக்களாட்சிக்கு எதிரானது என்று அவர் கருதிய சமூக சமத்துவமின்மையையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடுவதில் வேரூன்றிய தி.மு.க.வின் அரசியல் சித்தாந்தத்தை வலுவாக நிலைநிறுத்தினார், அவர், மக்களாட்சியின் வாயிலாக சமூக நீதியை எய்துவதற்கு கடுமையாகப் பாடுபட்டார்.

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், திராவிட சித்தாந்தத்தையும், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அடிச்சுவட்டையும் பின்பற்றி, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக் குட்பட்டு, மக்களாட்சி வழியில் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து, சமூக நீதியை எய்துதல், சமூகத்தின் விளிம்புநிலை மக்களை மேம்படுத்துதல், ஏற்றத்தாழ்வுகளை ஒழித்தல், பெண்களுக்கு அதிகாரமளித்தல், ‘அனைவருக்கும் அனைத்தும்’ ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ‘திராவிட மாடல்’ அரசைத் திறம்பட வழிநடத்தி வருகிறார்.

சுதந்திரப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஈந்த நமது ஆயிரக்கணக்கான மூத்த சகோதர, சகோதரிகளின் உயிர்த் தியாகங்களை ஒவ்வொருவரும் உணர வேண்டும். எனவே, மக்களாட்சி அரசுகளின் உண்மையான கருத்தியல் கோட்பாடுகளைத் திறம்படப் போற்றி, வலுப்படுத்தி, அவற்றை நமது இளைய மற்றும் எதிர்கால தலைமுறையினருக்குக் கடத்துவது ஒவ்வொரு இந்தியரின், குறிப்பாக நமது தலைவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் முழுப் பொறுப்பாகும்.

மாபெரும் இவ்விழாவிற்கு என்னைத் தனிப்பட்ட முறையில் அழைத்தமைக்காக தில்லி சட்டமன்ற அவைத்தலைவர் அவர்களுக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், வளவனூர், 15 வது வார்டு, பக்கமேடு பகுதியில், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய தானிய உலர் களத்தை திறந்து வைத்து, பொது மக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் மீனாட்சி ஜீவா, பா.ஜீவா, செயல் அலுவலர் அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், சுவை சுரேஷ், அசோக், ப.அன்பரசு, சரபோஜி, துணை செயலாளர்கள் லைட் ராஜேந்திரன், பெரியசாமி, ரகுமான் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.